**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.488/2020

வா.சா.1 ஜெயந்தி

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:-</u>**

1. தாவா சொத்திற்கு மேற்கே 1ம் பிரதிவாதி சொத்துள்ளது என்றாலும், அதற்கும் மேற்கே 2ம்பிரதிவாதியின் சொத்துள்ளது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் சொத்திற்கு மேற்கே யார் யார் சொத்துக்கள் உள்ளது என்றால் பரமசிவத்தின் சொத்துக்கள் அங்கு அமைந்துள்ளது.

2. தாவா சொத்தில் மேற்கே உள்ள எவர் பூமியிலும் கம்பிவேலிகள் அமைக்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் விழுந்துவிட்ட கம்பிவேலி இருக்கும் பகுதியில் சிறிது தள்ளி கான்கிரீட் மின்அறை உள்ளதா என்றால் உள்ளது. மின்அறை கான்கிரீட் பவுண்டேசன் போட்டு கட்டப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது என் கணவர் தான் அதைக்கட்டினார். அந்த மின்அறையில் எந்த சேதாரமும் இல்லை என்றால் சரிதான்.

3. மின்அறைக்கு எதிர்புறத்தில் அமைந்துள்ள தாவா சொத்தின் மையத்தில் ஒரு நிலத்தொட்டி 20 அடி நீளம், 10 அடி அகலம் மற்றும் 10 அடி ஆழம் கொண்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் ஆழ்துளைக்கிணறு அமைந்துள்ளது என்றால் சரிதான். ஆழ்துளைக்கிணறு மூலம் தண்ணீர் எடுத்து சேமித்து வைக்கப்படும் என்றால் சரிதான்.

4. அந்த நிலத்தொட்டியும் என் கணவர் தான் கட்டினார். எனவே நிலத்தொட்டியைப் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி பூமிக்கும், எனது தாவா சொத்திற்குமிடையே உள்ள கம்பிவேலி விழுந்த விவரத்தை 07.03.2020 தேதியன்று தான் தெரிந்துகொண்டேன் என்று

சொல்வது தவறு என்றால் சரியல்ல. மேற்கண்ட தேதிக்கு முன்பே மழைக்காலத்தில் அந்த வேலியானது விழுந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல.

5. 08.03.2020 அன்று நானும், எனது மகன் மகேஷ் மற்றும் அவரது உதவியாளர் கார்த்திகேயன் ஆகியோர் சேர்ந்து தாவா சொத்திற்கு சென்று அங்கிருந்த பிரதிவாதியிடம் கேள்வி கேட்டும், அவர் அமைதியாக எங்களுடைய பூமியை அனுபவிக்க விடமாட்டோம் என்று இதுபோன்ற செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருவோம் என்று பிரதிவாதிகள் ஒருபோதும் சொல்லவில்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. 23.05.2020ம் தேதியில் விழுந்த கம்பிவேலியை மீட்டமைக்க தாவா சொத்திற்கு சென்ற என்னையும், பணியாளர்களையும் மீட்டமைக்க விடாமல் பிரதிவாதிகள் தடுத்தார்கள் என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் கம்பிவேலி விழுந்ததற்கு பிரதிவாதிகளின் செயல் காரணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

7. கம்பிவேலி விழுந்ததற்கு பிரதிவாதிகள் தான் காரணம் என்பதற்கு அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வீடியோ எனது வழக்கறிஞரிடம் கொடுத்திருந்தேன். மேற்படி வீடியோ நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8. தாவா சொத்திற்கும், வா.சா.ஆ.7ல் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களுக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.7ல் குறிப்பிடப்பட்டுள்ள குறுந்தகடுகளில் என்ன இருக்கிறது என்று விவரம் தெரியாது என்றால் கம்பிவேலி விழுந்த போது அடிதடி தகராறு நடந்த விவரங்கள் அதில் பதிவாகியுள்ளது. என் மகன் மகேஷ்வரனுடன் வந்த உதவியாளர் கார்த்திகேயன் மேற்கண்ட தகராறு நடந்தபோது வீடியோ பதிவை அலைபேசி மூலம் பதிவு செய்தார்.

9. எத்தனை முறை இந்த சம்பவம் சம்மந்தமாக புகார் அளித்தேன் என்றால் ஞாபகமில்லை. ஆனால் புகார் அளித்தோம். மேலும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கும் புகார் அளித்தோம். மேற்படி குறுந்தகடுகளை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

10. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் வா.சா.ஆ.7 ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் வழக்குமூலமே இல்லை என்றால் சரியல்ல. எனவே நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.